RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருக்குறளில் இன்னிசை அளபெடை

**கி. பாலமுருகன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ் ஆர் எம் கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர், இந்தியா

# A Study of Innisai Alappadai in the Tirukkural

**K. Balamurugan** [a, *]

[a] Department of Tamil, SRM Arts and Science College, Kattankulathur-603203, India

* Corresponding Author:
balamuruganknmy@gmail.com

**ABSTRACT**

Tamil grammatical treatises classify Alappadai (prosodic elongation) into two major types: Uyiralappadai (vowel elongation) and Ottralappadai (consonantal elongation). Among these, Uyiralappadai is further divided into three categories: Seyyulisai Alappadai, Innisai Alappadai, and Sollisai Alappadai. These prosodic features are extensively employed in the Tirukkural, contributing to its poetic elegance, rhythmic harmony, and linguistic refinement. In particular, Innisai Alappadai plays a significant role in enhancing the musical quality and aesthetic appeal of the couplets while preserving their metrical structure. By examining the occurrence and function of this prosodic device in the Tirukkural, the present article highlights its contribution to the literary excellence and phonetic beauty of one of Tamil's greatest classical works.

**Keywords:** Tirukkural, Innisai Alappadai, Uyiralappadai, Musical Quality

## முன்னுரை

பழங்காலத்தில் பெரும்பாலும் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுள்களாகவே இருந்தன. செய்யுள்கள் யாவும் ஓசை அடிப்படையாகக் கொண்டன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, துறை, தாழிசை, விருத்தம் என பல வகையான செய்யுள் வடிவங்களும் இருந்தன.

செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் ஓசை நிறைவு செய்வதற்காக எழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும் அவ்வாறு நீண்டு ஒலிப்பதை அளபெடுத்தல் என்று கூறுவர் இவ்வாறு அளபெடுக்கும் அளபெடை இரண்டு வகைப்படும் அவை உயிரளபெடை, ஒற்றளபடை ஆகும்.

நெடில் எழுத்துக்களே அளவெடுக்கும். நெடில் எழுத்துக்கள் அளபெடுக்கும் பொழுது அந்த நெடில் எழுத்திற்கு இனமான குறில் எழுத்து அளப்பெடுப்பதற்கு அடையாளமாக அதன் அருகில் எழுதப்படும். செய்யுளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ள இடங்களின் எழுத்துக்களை நீட்டி ஒலிக்க வேண்டும்.

நெடில் எழுத்துக்கள் இரண்டு மாத்திரைஇவ்வெழுத்து அளபெடுக்கும் பொழுது அதற்கு இனமான குறில் எழுத்தை எழுதுவதால் குறிலுக்கு உரிய ஒரு மாத்திரையும் சேர்த்து உயிரளபெடை மூன்று மாத்திரை கால அளவில் ஒலிக்கும். பொதுவாக செய்யுளில் ஏற்படும் ஓசை குறைவை நிறைவு செய்யவே எழுத்துக்கள் அளபெடுக்கின்றன. எனினும் வேறு காரணங்களுக்காக அளபெடுப்பதும் உண்டு. இதன் அடிப்படையில் உயிரளபெடையானது செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை, இயற்கை அளபெடை என வகைப்படுத்தலாம்.

## திருக்குறளும் அளபெடையும்

திருக்குறள் குறள் வெண்பா எனப்படும் இலக்கண அமைப்பில் முதல் வரியில் நான்கு சீர்களும் இரண்டாம் வரியில் மூன்று சீர்களும் கொண்ட குறுகிய செய்யுள் வடிவமாகும்.

குறள் வெண்பா என்ற யாப்பு வடிவிலும், வெண்பாவிற்கே உரிய தலையாகிய வெண்டளை என்ற தளை அமைப்பையும் பெற்று, பெரும்பாலும் உவமை, இல்பொருள்உவமை, வேற்றுப்பொருள் வைப்பு போன்ற அணி இலக்கணத்தையும் பெற்று திரு + குறள்= மேன்மையான அல்லது அழகிய குறள் என்ற பண்புத்தொகையும் பெற்று, அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப்பொருட்களையும் எடுத்து இயம்பும் நூலாக திருக்குறள் அமையப்பெற்றுள்ளது. இவ்வாறு காணப்படும் திருக்குறளில் அளபெடை பரவலாக பயின்று வந்துள்ளது. அவற்றினை பின்வருமாறு காணலாம்.

திருக்குறளில் செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை எனும் மூன்றனுள்செய்யுளிசை மிகுந்தும், இன்னிசை அதனை அடுத்தும், சொல்லிசை மிகக் குறைந்த நிலையில் காணப்படுகின்றன.

## இன்னிசை அளபெடை

இன்னிசை அளபெடை என்பது செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுத்த வரும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை (குறள்- 15)

மழை பெய்யாவிட்டால் வறுமையால் மக்கள் கெடுவர். அதே மழை வறண்ட பூமியில் பெய்து பசியை போக்கி மக்களை காக்கும் அதாவது அழிப்பதும், காப்பதும் மழையேஎன்கிறார் திருவள்ளுவர். இக் குறளில் இரண்டு அளபெடை சொற்கள் காணப்படுகின்றன.

இங்கு கெடுப்பதும், எடுப்பதும் ஆகிய இரண்டு சொற்களும்நிரை, நிரைஎன்ற ஈரசைச் சொற்களாகும். இச்சொற்களில் எவ்வித இசை குறைவும் ஏற்படவில்லை எனினும் இச்சொற்களை நீட்டி ஒலிக்க எண்ணிய வள்ளுவர் இரண்டு மாத்திரை அளவு கொண்ட 'தூ' என்ற நெடில் எழுத்துடன் அதற்கு இனமான குறில் 'உ' என்ற உகரத்தை சேர்த்து மூன்று மாத்திரை ஆக்கி இங்கு கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்ற நிறை,நிறை, நேர் என்ற மூன்றுசைச் சீர்களாக அமைத்துக் காட்டியுள்ளார்.

மேலும் ஆசிரியபா இலக்கணப்படி சொற்கள் யாவும் ஈரசைச் சீராக அமைவது சிறப்பு. இங்கு கெடுப்பதும், எடுப்பதும் என்ற சொற்களில் அளபெடை எழுத்துக்கள் இல்லாமல் எழுதினாலும் தளை தட்டுவது இல்லை. ஆனால் வெறும் இசைக்காக வேண்டி வள்ளுவர் அளபெடையினை பயன்படுத்தியுள்ளார். இதனைத் தான் தொல்காப்பியரும்,

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய

கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர் (தொல்,எழுத்து,நூ-6)

எனவும்

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்

நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே (தொல், எழுத்து, நூற்- 41)

என்றும் அளபெடைக்கு இலக்கணம் கூறுகிறார். திருக்குறளில் ஊகாரம் இன்னிசையாக அளபெடுக்கின்றன. இவ்வாறு அளவெடுக்க காரணம் செய்யுளில் ஓசையை நீட்டி காட்ட வேண்டி திருவள்ளுவர் அமைத்துள்ளார். இதைத்தான்நன்னூலும்,

இசைக்கெடின் மொழிமுதல் இடைக்கடை நிலைகெடில்

அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே(நன்னூல், எழுத்து, நூற்- 92) என்கிறது.

இந் நூற்பாவிற்கு உரை தரும் நன்னூல் காண்டிகை உரையாசிரியர் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுக்கும் என்கிறார்.

இதன் வழி இசைக்காக மட்டுமே இன்னிசை அளபெடை திருக்குறளில் பயின்று வந்துள்ளது. இவ்வமைப்பில் துன்புறூஉம், இன்புறூஉம்(94) உடுப்பதூஉம், உண்பதூஉம்(166), இனித்தூஉம்(230), படுப்பதூஉம்(460), அழிவதூஉம், ஆவதூஉம்(461), வல்லதூஉம்(713), வல்லதூஉம்(845), ஒளித்ததூஉம்(928), வென்றதூஉம்(931), இழத்தொறூஉம், உழத்தொறூஉம்(940), உள்ளதூஉம்(982), கெடுப்பதூஉம், தூய்ப்பதூஉம்(1005), விழைவதூஉம்(1036), உடுப்பதூஉம், உண்பதூஉம்(1079), கண்டதூஉம்(1215) ஆகிய சொற்கள் இன்னிசை அளபெடையாக திருக்குறளில் பயின்று வந்துள்ளது.

வெண்டளை பிழையாதாயினும் இயற்சீர் வெண்பாவிற்கு உரிய வெண்சீர் வெண்டளையாய் இனிய ஓசை நிறைத்தற்பொருட்டு அளவெடுக்கப் பெற்று வருவது இன்னிசை என்று திரு சு. தண்டபாணி தேசிகர் கூற்று இங்கு பொருந்துவதாக உள்ளது. (பொன்.சௌந்தர்ராஜன்,அளபெடையும்திருக்குறளும்,ப-178)

நெட்டெழுத்துக்கள் ஏழனுால் ஆகாரம், ஏகாரம், ஓகாரம் ஆகியன இயல்பாகவே உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியது, ஐகாரம், ஔகாரம் மிக மிக அருகிய அளவில் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

ஈகாரம் அளவெடுக்கும் பொழுது பொதுவாக அவை சொல்லிசையாக (நசைஇ,குரீஇ) மாறிவிடுகிறது. எனவே எவ்வகையிலும் உணர்ச்சி கூறுகளை வெளிப்படுத்த இயலாத ஊகாரமே திருக்குறளில் இன்னிசையை நீட்டி உரைக்க வேண்டி இன்னிசை அளபெடையாக அளபெடுத்து இலக்கிய பயனை மிகுதிபடுத்துகிறது.

## முடிவுரை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுத்து வருவதை இன்னிசை அளபெடை என இலக்கண நூல்கள் இலக்கணம் பகிர்வதை காண முடிகிறது. முதல் அடியில் நான்கு சீர்கள் பெற்று இரண்டாம் அடியில் மூன்று சீர்களைக் கொண்டு குறுகிய செய்யுள் வடிவம்பெற்றது திருக்குறள் என்பது இங்கு புலனாகிறது. அளபெடை வகைகளான செய்யுளிசை அளபெடை திருக்குறளில் மிகுந்தும், இன்னிசை அளபெடை குறைந்த நிலையிலும், சொல்லிசை அளபெடை மிக குறைந்த நிலையிலும் காணப்படுவதை அறிய முடிகிறது. இன்னிசை அளபெடையாக திருக்குறளில் 16 இடங்களில் ஊகாரம் மட்டும் பயின்று வந்துள்ளதை காண முடிகிறது. நெட்டெழுத்துக்கள் ஏழனுள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆகாரம், ஏகாரம், ஓகாரம், ஐகாரம், காரம் ஆகியவற்றை தவிர்த்து சொல்லிசையாக வரக்கூடிய ஈகாரத்தை தவிர்த்தும், உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலாத ஊகாரத்தை இசையை நிறைவிக்கும் பொருட்டு திருவள்ளுவர் திருக்குறளில் 16 இடங்களில் பதிவு செய்துள்ள பாங்கினை இக்கட்டுரை வழி ஆராய்ந்து முடிந்தது.

## References

திருக்குறள், (2006) வர்தமானார் பதிப்பகம், தியாகராய நகர் சென்னை.

முனுசாமி, வி. (1982), உலகப் பொதுமறை திருக்குறள் உரை விளக்கம், திருமகள் நிலையம், சென்னை.

இளம்பூரணர், (1969) தொல்காப்பியம், கரந்தைப் புலவர்கள், தஞ்சாவூர்-2,

வெள்ளைவாரணம், தா.ம. ( 969), நன்னூல் சிவஞான முனிவர் விருத்தியுரை, திருப்பனந்தாள்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License